**AETM – 204**

**II Semester B.B.A./B.H.M./B.C.A./B.S.W.**
**Examination, August/September 2023**
**(NEP – Freshers and Repeaters)**
**TAMIL LANGUAGE (Part – I), (Paper – II)**

Time : 2½ Hours Max. Marks : 60

SECTION – A

I. அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (5×1=5)

1) 'ஜன்னல்' என்பது இந்த மொழிச் சொல்
   1) கன்னடம் 2) அரபு
   3) துளு 4) போர்த்துகீசியம்

2) 'பைந்தமிழ்' – இச்சொல்லின் இலக்கணக் குறிப்பு
   1) உவமைத்தொகை 2) பண்புத்தொகை
   3) வேற்றுமைத்தொகை 4) அன்மொழித்தொகை

3) 'நரிவிருத்தம்' என்ற நூலின் ஆசிரியர்
   1) காளிதாசன் 2) கொங்குவேள்
   3) கம்பர் 4) திருத்தக்கதேவர்

4) வில்லிபுத்தூரார் பிறந்த ஊர்
   1) திருவாரூர் 2) சனியூர்
   3) திங்களூர் 4) பெங்களூர்

5) 'சீவகசிந்தாமணி' என்ற காப்பியத்தின் வேறு பெயர்
   1) மணநூல் 2) அகராதி
   3) நன்னூல் 4) நிகண்டு

P.T.O.

II. எவையேனும் ஐந்திற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக. (5×3=15)

1) அந்த மாநகர் புகுந்த பின்அரசன் இல்புகாமல்
புந்திகூர் அருள் விதுரன்வாழ் வளமனை புகுந்தான்

2) மடந்தை பொன்திரு மேகலை மணி உகவே மாசு அற திகழும் ஏகாந்த
இடம்தனில் புரிந்தே நான் அயர்ந்து இருப்ப எடுக்கவோ கோக்கவோ
என்றான்

3) மலையின் அகலிய மார்பன் அல்லது இவ்
உலகினில் இலையென ஒருவன் ஆயினன்

4) ஆடகச் செம்பொன் பாவை ஏழுடன் தருவல் ஐய
வாடலில் வதுமை கூடி மணமகன் ஆக என்றான்

5) பொன்னுலகு இழந்து தீய நரகினில் புகுவது அல்லால்
பின்னொரு கதியும் உண்டோ

6) புத்தனாயிருந்த நான் இதோ இந்தக் கணத்தில்
நிலை திரிந்தேன்

7) அவள் இல்லற வாழ்க்கைக்கும் தகுதி அற்றவள்
என்று டாக்டர் சொல்ல, தனது கல்யாணக் கனவு
கரைந்து போவது போலத் தோன்றியது

8) முன்மாதிரி கிராமமாக தன்னிறைவு பெற்ற கிராமமாக
இதன் பெயரும், புகைப்படமும் பேப்பரில் சீக்கிரம்
வரப்போகிறது

## SECTION – B

III. எவையேனும் ஐந்து வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக. (5×4=20)

1) பகுபதம், பகாப்பதம் இவற்றைச் சான்றுடன் விளக்குக.

2) பெயர்ச்சொல் என்றால் என்ன ? அதன் வகைகளைச் சான்றுடன்
குறிப்பிடுக.

3) தெரிநிலை வினைமுற்றைச் சான்றுடன் விளக்குக.

4) உம்மைத்தொகை, அன்மொழித் தொகையினைச் சான்றுடன் கூறுக.

5) இந்திரன், கர்ணனின் கவச குண்டலங்களை எவ்வாறு பெற்றான் ?

6) முகமதுநபி வனத்தில் கண்ட காட்சிக்குறித்து எழுதுக.

7) 'எதிர்பாராத உதவி' என்னும் சிறுகதையின் கருவை விளக்குக.

8) இப்படிக்குத் தங்கள் உண்மையுள்ள என்ற சிறுகதை காட்டும் நாராயணனின் பாத்திரப் படைப்புக் குறித்து எழுதுக.

## SECTION – C

IV. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. **(4×5=20)**

1) தருமன், கண்ணனைத் தூதாக அனும்பும்போது உரையாற்றியவை யாவை ?

2) சீவகனின் பிறப்பும், வளர்ப்பும் குறித்து எழுதுக.

3) நபிகள் நாயகம் வேடனிடம் எவ்வாறு வேண்டிக் கொண்டார் ?

4) மெய்யப்ப செட்டியாரின் குணநலன்களை 'மேன்மக்கள்' சிறுகதை வழி விளக்குக.

5) அரசு மருத்துவமனைகளின் போக்கினை 'விழல்' என்ற சிறுகதையின் வழிப் புலப்படுத்துக.

6) ரத்தினம் பிள்ளையின் பாத்திரப் படைப்பினை 'தந்தை' சிறுகதை வழி விளக்குக.

---